**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.938/2023</u>**

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14–ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.1** சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | செல்வகுமார் | தொழில் |
| த/பெ | சாமிநாதன் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**1.** என்னுடைய தகப்பனார் பெயர் சாமிநாதகவுண்டர் தாயார் பெயர் அங்காத்தாள் என்றால் சரிதான். தகப்பனார் **02.12.2021** ஆம் தேதியும் என்னுடைய தாயார் **16.6.2008** ஆம் தேதியும் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். **1–**ம் பிரதிவாதி என்னுடைய உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான் அவரைத் தவிர எனக்கு வேறு யாரும் சகோதர சகோதரிகள் இல்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் அவருடைய தகப்பனார் மற்றும் சகோதரர்களுடன் சேர்ந்து செய்து கொண்ட பாகக்கராரில் ஒதுக்கப்பட்ட சொத்தை கடந்த **14.11.1972** மற்றும் **18.08.1980** ஆகிய தேதிகளில் பிரித்துக் கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். அதற்கு பின்னிட்டு என்னுடைய தகப்பனார் **26.03.1980, 28.04.1980, 28.08.1998, 20.09.2013** ஆகிய தேதிகளில் சொத்துக்களை கிரையம் செய்தார்கள் என்றால் சரிதான். தாவாச் சொத்தை செல்லம்மாள் என்பவரிடம் **1980** ஆம் வருடம் என்னுடைய தகப்பனார் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் **956** சதுர அடி என்று சொன்னால் சரிதான்.

**2.** தாவா இரண்டு மற்றும் மூன்று அயிட்ட சொத்துக்களை பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் என்னுடைய தகப்பனார் **1–**ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் அதை வழக்கறிஞர் அறிவிப்பு வந்த

பிறகு தெரிந்து கொண்டேன். அறிவிப்பின் சரத்துகளை பார்த்து தெரிந்து கொண்டேன். அதன் பின்னிட்டு உயிலின் விபரங்களை தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் சரிதான். தாவா இரண்டு மூன்று அயிட்ட சொத்துக்கள் மேற்படி உயிலில் 1 மற்றும் 2 வது அயிட்ட சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். உயிலில் 1வது அயிட்ட சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள 956 சதுர அடி உள்ள நிலத்தை 1-ம் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதியிடமிருந்து ரூபாய் 2 லட்சம் தொகை பெற்றுக்கொண்டு அவருக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரிதான் அதைத் தவிர மற்ற சொத்துக்கள் எதுவும் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையில் பிரிபடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரையம் 20.09.2023 ஆம் வருடம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண் 2152/2023 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரையம் எனக்கு 2023 ஆம் தேதி வருடத்திலிருந்து தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் தாவாவில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யான விபரங்கள் என்றாலும் இரண்டாம் பிரதிவாதி சரியான தொகை கொடுத்து சட்டபூர்வமாக கிரையம் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எனவே இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.14 19:05:10 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.